# சுப்புலக்சுமி காசிநாதன்

சுப்புலக்சுமி காசிநாதன் என்று எழுதினால் தான் இக்கலைத் தம்பதியினரை நாம் முழுமையாகத் தெரிந்துகொள்ள முடியும். தனித்தனிப் பெயராக எழுதினால் பின்பு அதற்கு வேறாக விளக்கம் தரவேண்டும்.

'தாய்வீடு' பத்திரிகையில் சுப்புலக்சுமி காசிநாதன் பற்றி எழுதுவது என்று நினைத்துக் கொண்டு அவரிடமும் சில விபரங்களைப் பெற முயற்சித்தேன். "உங்களுக்கு விபரங்கள் எல்லாம் தெரியும் தானே?" என்று முடித்துக்கொண்டார். நிழல் படம் கேட்டேன்! "தம்பி பாலா எழுதுகிறேன் என்று கேட்டு படங்களும் அவரிடம் கொடுத்துவிட்டேன், இனி படம் புதிதாக எடுக்கவேண்டும்" என்று சொன்னார். இவரிடம் இவர்பற்றிய விபரங்கள் வாங்க முடியாது என்ற முடிவுக்கு வந்தேன்.

புகழுக்காக ஒரு கூட்டம் ஆலாய்ப் பறக்கின்றது. இவர்கள் கலைத்துறைக்குச் செய்த பங்களிப்பை வாழும்பொழுதே முழுமையாகச் சொல்லுவோம் என்றால், இன்னொரு கூட்டம் அதை விரும்பவில்லை.

திருமதி சுப்புலக்சுமி காசிநாதன் தம்பதியர் இப்பொழுது கனடாவில் வாழ்கின்றார்கள். இங்கும் அவர்கள் கலைப் பணியில் ஈடு பட்டிருக்கிறார்கள். கனடாவுக்குப் புலம் பெயர முன், தாயகத்திலே - இவர்களது கலைப் பணியை முதலில் பார்ப்போம்.

சுப்புலக்சுமி பாடி நடிக்கக்கூடிய திறமை மிக்க கலைஞர். ஆரம்ப காலங்களில் கே.எம். வாசகரின் நாடக ஒத்திக்கைக்கு இவர் வரும்போது, இவர் ஒரு தமிழ் நாட்டுக் கலைஞர் என்று நான் எனக்குள் ஏனோ எண்ணினேன்.

நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் வானொலி இசை நாடகங்களில் இணைந்து பாடியவர் இந்த சுப்புலக்சுமி. இவரது கணவர் காசிநாதன். மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் பரம்பரை அறங்காவலர், இராமேஸ்வரம் அவர்களின் புதல்வர்.

சுப்புலக்சுமியின் வாழ்க்கைப் பயணம் யாழ்ப்பாணம், கொழும்பு, ரொறன்ரோவென அமைந்தது. தமிழ் மக்கள் அனேகமானவரின் வாழ்க்கையும் இப்படித்தான்.

சுப்புலக்சுமி காசிநாதன் யாழ் மேடைகளை அலங்கரித்த காலத்தில் 'சாணக்கியன்' சரித்திர நாடகத்தில் காசுவியாகவும் நடிகர் பேரம்பலம் சாணக்கியனாகவும் நடித்தார்கள்.

1969ம் ஆண்டு தொடக்கம் சுப்புலக்சுமியை கொழும்பு மேடைகளிலும் வானொலி நிகழ்ச்சிகளிலும் நாம் சந்தித்தோம். இவர் மிகப் புகழ்பெற்ற 'கோமாளிகள்' வானொலி நாடகத்திலும், பின்பு 'கோமாளிகள்' திரைப் படத்திலும் நடித்தவர். புகழ்பெற்ற வானொலி நடிகர்கள் மரைக்கார் ராமதாஸ், அப்புக்குட்டி ராஜகோபால், உப்பாலி செல்வசேகரன், ஐயர் அப்துல்ஹமீட் என்று பல முன்னணி நடிகர்களுடனும் நடித்தவர். பின்பு திரைப்படத்திலும் நடித்தவர்.

வானொலி நாடகங்களில் முதன்மையானவர் சுப்புலக்சுமி காசிநாதன். திரைப்படங்களிலும் மேடை நாடகங்களிலும் முதன்மையானவர்தான். 'கோமாளிகள்' திரைப் படத்தில் இவருக்கு செல்லமணி என்ற பாத்திரம். இலங்கையின் வெற்றிப் படங்களில் ஒன்று 'கோமாளிகள்'. 45 நாட்களில் படப்பிடிப்பு முடிந்து, படம் ஒவ்வொரு தியேட்டர்களிலும் பல வாரங்கள் ஓடிய பெருமையையும் பெற்ற இலங்கைத் திரைப்படம் 'கோமாளிகள்' தான்.

சுப்புலக்சுமி நாடக வரலாற்றில் ஒரு சகாப்தம். பெண்கள் மேடைக்கு வரத் தயங்கிய காலத்திலேயே பாடி, நடித்து பெண்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியவர். இந்தப் பெருமையில் பெரும் பங்கு திரு.இரா.காசிநாதனைச் சேரும். இவ்விடத்தில், அவருக்கு எமது மனம் கனிந்த வாழ்த்துக்கள்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வானொலி மஞ்சரி சுப்புலக்சுமி பற்றி சிறப்பாக எழுதியது. வானொலிக் குயில் என்று போற்றப்பட்டவரும், சானாவின் பண்ணையில் வளர்ந்த வானொலி மேடை நடிகையுமான ராஜேஸ்வரி சண்முகம் அவர்களின் நூலில், சுப்புலக்சுமி காசிநாதன் தம்பதியினரின் கலைச் சேவையைப் பாராட்டி எழுதியிருந்தார்கள். சிரித்திரன் சஞ்சிகை சுப்புலக்சுமியின் அட்டைப் படத்துடன் பதின் நான்கு பக்கப் பேட்டியைப் பிரசுரித்திருந்தது. இப்பேட்டியைக் கண்ட அமரர் கே.எஸ். பாலசந்திரன் அவர்கள் 'தன்னுடைய ஆதர்ச நடிகை' என்று சுப்புலக்சுமியை போற்றிப் புகழ்ந்தார். சிரித்திரன் ஆசிரியர் சிவஞான சுந்தரம் அவர்களும் சுப்புலக்சுமியினுடைய இரசிகராக இருந்ததால் இவ்வளவு பக்கங்கள் தரச் சம்மதித்தார்.



சுப்புலக்சுமி காசிநாதன் சானாவின் காலத்திலேயே வானொலி நாடகங்களில் நடிக்கத் தொடங்கியவர். பின்பு கே.எம். வாசகரின் கதம்பம் வானொலி நிகழ்ச்சிகளிலும் பல வானொலி நாடகங்களிலும் நடித்து வந்தார். சானாவின் 'மத்தாப்பு' நிகழ்ச்சி இவருக்கு புகழ் சேர்த்தது.

இலங்கையிலே 1970 களிலே வெண்சங்கு திரைப்படத்தில் முன்னணிக் கலைஞர்கள் லடீஸ்வீரமணி, ரொசாரியோ பீரிஸ் ஆகியோருடனும் சுப்புலக்சுமி நடித்தவர். எம்.எஸ். தம்பு தயாரித்த ஒரேயொரு தமிழ்ப் படம் வெண்சங்கு. இப்படத்தில் யாழ்ப்பாணத்தில் மிகவும் பிரபலமான 'அடங்காப்பிடாரி' நாடகமும் சேர்க்கப்பட்டிருந்தது. எம்.எஸ் தம்பு அவர்களின மகன் றொபின் தம்பு, சிங்களப் படத் தயாரிப்பில் முன்னணி வகிக்கிறார். சிங்களப் படங்களை தமிழர்களும் தமிழ்ப் படங்களைச் சிங்களவர்களும் தயாரித்தார்கள். படப்பிடிப்பு மற்றும் இன்னும் இதர கலைகளில் முஸ்லிம் மக்களும் மிக ஒற்றுமையாகச் செயல்படும் துறை சினிமா என்றால் மிகையாகாது. 'வெண்சங்கு' சுப்புலக்சுமியின் முதல் படம்.

1976 களிலே 'சுமதி எங்கே' படம் வெளியாகியது. இதில் சுப்புலக்சுமி, காசிநாதன் இருவருமே நடித்திருக்கிறார்கள், இதன் திரைக்கதை பாடல்களை காயத்திரி அம்மா என்று அழைக்கப்படும் ராஜம் புஸ்பவனம் எழுதியிருக்கின்றார். இவர் ஒரு வில்லிசைக் கலைஞர். ஆன்மீக ஈடுபாடு கொண்டவர். மன்னார் இவரின் பிறப்பிடம். கவிஞர் மஹாகவியிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். வில்லிசை பற்றி ஒரு நூலும் எழுதியுள்ளார். எச்.சி சந்திரவன்சவின் படம் 'சுமதி எங்கே'. இப் திரைப்படத்தில் சுப்பு-லக்சுமி தம்பதிகளுடன் ஜபீர்குமார், யோகேஸ்வரன், ஜெயந்தி, ஜெயகௌரி ஏ.எஸ் ராஜா. வி. ராஜம், தனூஸ் இப்படி ஏராளமான நடிக, நடிகைகள்.

1978 களிலே 'தெய்வம் தந்த வீடு' படம் வெளிவந்தது. இது கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் சிஷ்யன் ஏ. ரகுநாதனின் பாரிய முயற்சி. இதன் தயாரிப்பாளர் ஹட்டன் பொன்னுச்சாமிப்பிள்ளை. சுப்புலக்சுமியும் சந்திரகலாவும் சோகச் காட்சியில் மிகவும் சிறப்பாக நடித்தார்கள். ரேலங்கி செல்வராஜா, தனரெத்தினம் ஆகியோர் உட்பட பல நடிகர்கள் பங்கேற்ற நடன நாதஸ்வர வித்துவானின் காதல் கதை இது.

கனடாவில் ரவி அச்சுதனின் 'கனவுகள்' திரைப்படத்தில் சுப்புலக்சுமி, காசிநாதன், அமரர் கே.எஸ். பாலசந்திரன் உட்பட பல புலம்பெயர் கலைஞர்கள் மிக நன்றாகவே நடித்துள்ளார்கள்.

கனடாவில் 'புதியதோர் வீடு' நாடகத்தில் கே.எஸ் பாலசந்திரன் அவர்கள் மறைக்காடராகவும் சுப்புலக்சுமி கண்ணாத்தை யாகவும் மிகச் சிறப்பாக நடித்தார்கள். இது மஹாகவி உருத்திரமூர்த்தி அவர்களுடைய நாடகம். ஆர்வமுள்ள நாடக அபி-மானிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

2008ம் ஆண்டு பிற்பகுதியில் கனடாவில் கணபதி ரவீந்திரன், ரூபி ஆகிய நாடக அபிமானிகளால் சுப்புலக்சுமி காசிநாதன் கலைத் தம்பதியின் பெயரில் மேடை அமைத்து அவர்களை வாழும் பொழுதே வாழ்த்திய பெருமையை எல்லாருக்கும் உரியவராக்கினார்கள்.

## ஆழித்து முத்துக்கள் 126

**- சோக்கல்லோ சண்முகநாதன் -**

சுயாதீன கலைத் திரைப்பட இயக்கம் சுப்பு-லக்சுமி அவர்களுக்கும் மறைந்த கலைஞன் கே.எஸ். பாலசந்திரன் அவர்களுக்கும் வாழ்நாள் விருது வழங்கிக் கௌரவித்தது.

'தாய்வீடு' பத்திரிகை ஏற்பாடு செய்திருந்த பாலசந்திரனுக்கான ஒரு இரங்கல் கூட்டத்தில் திருமதி சுப்புலக்சுமி காசிநாதன் அவர்கள் பேசினார். கல்நெஞ்சங்களும் கரைந்தன.

திரு. இராமேஸ்வரம் காசிநாதன் 'சமுதாயம்', 'கடமையின் எல்லை', 'கனவுகள்', 'சுமதி எங்கே' ஆகிய எம்மவரது, திரைப் படங்களில் நடித்தவர். 'சமுதாயம்' படத்தைத் தயாரித்தவர் திரு. ஹென்றி சந்திர வன்ச. 'கடமையின் எல்லை'யைத் தயாரித்தவர் ஆசிரியர் எம். வேதநாயகம். எல்லாவற்றிற்கும் மேலாக சுப்புலக்சுமியின் வளர்ச்சியின் பெரும் பங்கு காசிநாதனைச் சேரும். காசிநாதனை விட்டுவிட்டு சுப்புலக்சுமி பற்றி எழுதமுடியாது.

எமது கலைஞர் கே.எஸ். பாலசந்திரன், "அக்கா சுப்புலக்சுமிதான் எனது ஆதர்ச நடிகை, அவரது நடிப்பைப் பார்த்து நான் உற்சாகமடைந்து, பின்பு பல கலை முயற்சிகளில் ஈடுபட்டேன்" என்று என்னிடம் சொன்னார். இதை நான் அவரைப் பற்றி எழுதிய 'பாலசந்திரன் என்றொரு கலை ஆளுமை' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளேன். கே.எம். வாசகரின் நாடகம் 'பார்வதி பரமசிவம்'. இதில் சுப்புலக்சுமிக்கு இரு வேடங்கள். இளம் பெண்ணாகவும் கிழவியாகவும் நடித்தார். இந்நாடகம் தான் கே.எஸ். பாலசந்திரனை, இவரைத் தனது ஆதர்ச நடிகையாக ஏற்க வைத்தது. திருமதி சுப்புலக்சுமி காசிநாதன் சில காலங்களுக்கு முன்பு நோய்வாய்ப்பட்டு இப்பொழுது பூரண குணம் அடைந்துள்ளார். அவரும் கணவர் மகளுடனும் பேரக்குழந்தைகளுடனும் சந்தோசமாக வாழுகின்றனர்.

எனது இக்கட்டுரையை நிறைவு செய்ய முன்பு முத்தாய்ப்பாக அவருக்கு, அவரின் கலைப் பணிகளுக்கு, திரு. காசிநாதன் அவர்களுடைய மிகப் பெரிய தொண்டுகளுக்கு நான் வாழ்த்து கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

வானொலி நாடகங்களில் முதன்மையானவர் சுப்புலக்சுமி காசிநாதன். திரைப்படங்களிலும் மேடை நாடகங்களிலும் முதன்மையானவர்தான். 'கோமாளிகள்' திரைப்படத்தில் இவருக்கு செல்லமணி என்ற பாத்திரம். இலங்கையின் வெற்றிப் படங்களில் ஒன்று 'கோமாளிகள்'. 45 நாட்களில் படப்பிடிப்பு முடிந்து, படம் ஒவ்வொரு தியேட்டர்களிலும் பல வாரங்கள் ஓடிய பெருமையையும் பெற்ற இலங்கைத் திரைப்படம் 'கோமாளிகள்' தான்.

வாழ்க பல்லாண்டு!
வளர்க உமது
கலைப்பணி!



sanmuganathan@thaiveedu.com